
பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 05 திங்கட்கிழமை 23.10.2023 அதிர்வு 84

## கத்தியால் குத்தி ஒருவர் கொலை

### மைத்துனர் கைது



மைத்துனரைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் 28 வயதுடைய 04▶



### மூன்று அமைச்சுக்களை மாற்றியமைத்தார் ரணில்

# கெஹலியவிடம் இருந்து சுகாதார அமைச்சு பறிப்பு

### சுற்றாடல் அமைச்சு கையளிப்பு

*- சுடர் திலீபன் -*

கெஹலிய ரம்புக்வெலவிடம் இருந்து சுகாதார அமைச்சுப் பதவி இன்று பறிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய சுகாதார அமைச்சராக ரமேஷ் பத்திரண நியமிக்கப்பட்டுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெலவுக்குச் சுற்றாடல் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், விவசாய அமைச்சராகச் செயற்பட்ட மஹிந்த அமரவீரவுக்குப் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சும் கையளிக்கப்பட்டுள்ளது.

ரமேஷ் பத்திரண கைத்தொழில் அமைச்சுப் பதவியையும் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

இன்று இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில், 04▶




## மொட்டுக் கட்சி கடும் எதிர்ப்பு

### ஜனாதிபதியின் முடிவு தவறு என சாகர விமர்சனம்

அமைச்சரவை மாற்றத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று 04▶



## ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டம்

**- பொகவந்தலாவ நிருபர் சதீஸ் -**

நோர்வூட், நியூவெளிகம பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மூன்று மாத கால சம்பள நிலுவைப் பணத்தையும், 04▶



## திருமலையில் ஆணின் சடலம்

### வலது காதில் இரத்தக் கசிவுடன்

**- அப்துல்சலாம் யாசீம் -**

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆணொருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஈச்சிலம்பற்று – முத்துச்சேனை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.சதீஸ் (வயது 35) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு அந்த நபர் உள்ளிட்ட மூன்று பேர் சேர்ந்து மதுபானம் அருந்தினர் எனவும், மற்றைய இருவரும் வீடுகளுக்குச் சென்றனர் எனவும், அந்த நபர் 04▶

# தென் மாகாணத்தில் கடும் மழை; பாடசாலைகளை மூடத் தீர்மானம்!

தென் மாகாணத்தில் நேற்று (22) இரவு முதல் பெய்துவரும் கடும் மழை காரணமாகப் பல பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, அக்குரஸ்ஸ, தெனியாய, முலட்டியான மற்றும் வலஸ்முல்ல ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மாத்திரம் மூடுவதற்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தென் மாகாணக் கல்விச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அவசர நிலை காரணமாகத் தென் மாகாண கல்விச் செயலாளரின் அனுமதிக்கு உட்பட்டு தெனியாய கல்வி வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று (23) விடுமுறை வழங்கப்பட்டது என்று தெனியா பிராந்திய கல்விப் பணிப்பாளர் தம்மிகா பிரியதர்ஷனி தெரிவித்தார்.

இதேவேளை, கடும் மழை காரணமாக மாத்தறை – கொட்டபால வீதியில் கிரிலிப்பன பகுதி தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிரிலிப்பன பிரதேசத்தில் இருந்து மண் மேடு சரிந்து வீழ்ந்தமையால் வீதி தடைப்பட்டுள்ளது.

மொரவக – நெலுவ வீதியும் மொரவக நகரத்திலிருந்து தடைப்பட்டுள்ளது. கிரம ஓயா நிரம்பி வழிவதால் பிடபெத்தர பிரதேசம் நீரில் மூழ்கியுள்ளது.

இதேவேளை, நில்வலா கங்கையின் மேல் மற்றும் மத்திய பகுதிகளில் கணிசமான மழை பெய்து வருவதால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் பின்வரும் பகுதிகளில் கணிசமான அளவு வெள்ளம் ஏற்படக்கூடும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது. கொட்டபொல, பிடபெத்தர, பஸ்கொட, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, திஹாகொட, மாத்தறை மற்றும் தெவி நுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நில்வலா கங்கை பெருக்கெடுக்கும் தாழ்வான பகுதிகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## நில்வள கங்கை பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை!



நில்வலா கங்கையின் மேல் மற்றும் மத்திய பகுதிகளில் கணிசமான மழை பெய்து வருவதால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 24 மணித் தியாலங்களில் பின்வரும் பகுதிகளில் கணிசமான அளவு வெள்ளம் ஏற்படக் கூடும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

கொட்டபொல, பிடபெத்தர, பஸ்கொட, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, திஹாகொட, மாத்தறை மற்றும் தெவிநுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நில்வலா கங்கை பெருக் கெடுக்கும் தாழ்வான பகுதிகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## கட்டுநாயக்காவில் விபத்து; இருவர் சம்பவ இடத்தில் பலி!

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த அதிசொகுசு பேருந்துடன் கட்டுநாயக்காவில் ஓட்டோ ஒன்று மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

நேற்று (22) இரவு இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த அந்த பஸ் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது கட்டுநாயக்க பகுதியில் ஓட்டோவுடன் மோதியுள்ளது.

இதன்போது ஓட்டோவில் பயணம் செய்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஓட்டோ முற்றாகச் சேதமடைந்துள்ளது.



## மத்தியஸ்த நுட்ப முறை தொடர்பில் செயலமர்வு

(அ.அஸ்வர்)

மத்தியஸ்த நுட்ப முறை மற்றும் உபாயங்கள் தொடர்பான ஐந்து நாள் பயிற்சிநெறி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியின் போது அம்பாறை மாவட்ட செயலக மத்தியஸ்த பயிற்றுனர் எம்.ஐ.எம்.ஆஸாத் மற்றும் வவுனியா மாவட்ட செயலக மத்தியஸ்த பயிற்றுனர் எஸ். விமலராஜ், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல்.ஆஸாத், கோறளைப்பற்று மேற்கு மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீவிதா ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

இந்தப் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.றமீஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மண்மேடு சரிந்து வீழ்ந்து மாணவன் உயிரிழப்பு!

மாத்தறை – கொலொன்ன தடயம் கந்த பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயர்தர மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மண் மேடு சரிந்துள்ளமையால் அந்தப் பகுதிக்கு தற்போது செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று (22) இரவு, வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில், தொரபனே பாடசாலையில் கல்வி பயிலும் 17 வயது மாணவன் உயிரிழந்துள்ளார்.

சடலம் தற்போது ஓமல்பே வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



# உதவும் கரங்கள் அமைப்பால் இலவச ஊடகக் கல்வி அறிமுகம்



அனைவருக்கும் இலவச ஊடக கல்வியை வழங்கும் நோக்கத்துடன், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் சிறகுகள் ஊடக வலையமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பு தமிழ் சங்கத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ரகுநாதன் ரமேஷ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் சிறகுகள் அமைப்பின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பொருளாதார ரீதியில் பின்னடைவுகளைச் சந்தித்துள்ள இளைஞர்கள், யுவதிகளை ஊக்குவித்து, இலங்கை ஊடகத்துறைக்குள் இளைஞர், யுவதிகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் இந்த சிறகுகள் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவரும், சிறகுகள் ஊடக நிறுவனத்தின் தலைவருமான ரகுநாதன் ரமேஷ்வரன், உதவும் கரங்கள் அமைப்பின் செயலாளர் எஸ்.தயாஎன் ஆகியோர் சிறகுகள் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்தனர்.

சிறகுகள் டாட் எல்.கே. என்ற இணைய முகவரி ஊடாக சிறகுகள் இணையத்தளத்துக்குள் பிரவேசித்து, இணையத் தளத்தில் காணப்படும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பி வைப்பதன் ஊடாக, இலவச ஊடக கல்வியை தொடர முடியும்.

முதல் கட்டமாக மூன்று மாத கால இலவச ஊடக கற்கையை மாணவர்களுக்கு வழங்கி, அதன் பின்னரான ஒரு மாத காலம் இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனங்களில் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

இவ்வாறு முன்னணி ஊடக நிறுவனங்களில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில், திறமைகளின் அடிப்படையில் அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஆடைத்தொழிற்சாலை...

ஒரு வருடத்துக்கான மேலதிக கொடுப்பனவையும் வழங்குமாறு கோரி ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

"மூன்று மாதத்துக்குரிய சம்பளத்தையும், வருடத்துக்கான போனஸையும் ஆடைத் தொழிற்சாலை அதிகாரங்கள் எமக்கு வழங்காமல் தொழிற்சாலையையும் மூடி விட்டுச் சென்றுள்ளனர். இதனால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்" – என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

"நாங்கள் வேறு தொழிற்சாலைக்குத் தொழிலுக்குச் செல்ல முற்பட்டால் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான பத்திரத்தை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர். அது காணாமல்போய்விட்டது எனவும் அவர்கள் கூறுகின்றனர்" – என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, நோர்வூட் நியூவெளிகம ஆடைத் தொழிற்சாலை மூன்று மாத காலமாக மூடப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## கத்தியால் குத்தி...

நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம், கற்பிட்டி – கந்தகுளிய பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் வசிக்கும் 34 வயதுடைய ஒருவரே கத்தியால் குத்தப்பட்டு இறந்துள்ளார்.

தனது இரு மைத்துனர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தைச் சமரசம் செய்ய முற்பட்டபோதே கத்தியால் குத்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைதுசெய்யப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளைக் கற்பிட்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில்...

மது அருந்திய இடத்தில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார் எனவும் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் வலது காதில் இரத்தம் கசிந்து காணப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் எம்.ஏ.சீ.மஹ்ரூப் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

சடலத்தைப்பிரேதபரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுமாறும் பொலிஸாரை நீதிவான் பணித்தார்.

இந்த மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஈச்சிலம்பற்று பொலிஸார், உயிரிழந்த நபருடன் மது அருந்திய இருவரையும் விசாரணைக் குட்படுத்தியுள்ளனர்.

## மொட்டுக் கட்சி...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து கெஹலிய ரம்புக்வெலவை மாற்றியது முற்றிலும் தவறான விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கெஹலியவுக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் சில நடவடிக்கைகளை எடுப்பது சரியானதா என்பது குறித்து ஜனாதிபதி சிந்தித்திருக்க வேண்டும் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய சுகாதார அமைச்சராக ரமேஷ் பத்திரணவை நியமிப்பது குறித்த கட்சியின் அதிருப்தியை ஏற்கனவே ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியமை எமக்கு அதிருப்தியளிக்கின்றது.

இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கிவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அதனை வழங்குவது தவறான முடிவு. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்." – என்றார்.



## கெஹலியவிடம் இருந்து...

அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சர்கள் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படி, சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெலவும், விவசாய அமைச்சராக மகிந்த அமரவீரவும் சுகாதார அமைச்சராக வைத்தியர் ரமேஷ் பத்திரணவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய அமைச்சுக்கு மேலதிகமாகவே பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக மகிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளதோடு கைத்தொழில் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக வைத்தியர் ரமேஷ் பத்திரண சுகாதார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது நிதி இராஜாங்க அமைச்சராகப் பதவி வகிக்கும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, அமைச்சரவை அந்தஸ்தற்ற தோட்டத் தொழில் முயற்சிகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். – என்றுள்ளது.









# விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு, விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும் கலந்துகொண்டார்.

இதன்போது மாவீரர் நாள் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தார்

எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வை அனுஷ்டிக்கும் வகையில் இந்தச் சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.









# நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராக வாஜித்

## இன்று கடமைகளைப் பொறுப்பேற்பு







**(எம்.எம்.றம்ஸீன்)**

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ. வாஜித் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது டிஜிட்டல் உலகு

'முதலாளியம் பருத்து உச்சம் பெற, தொழிலாள வர்க்கத்தின் தொகை பெருகும். சுரண்டல் அதிகரிக்கும். வறுமையின் விளிம்புக்குத் தள்ளப்படும் பாட்டாளி வர்க்கம் அதைச் சகித்துக் கொள்ள முடியாத நிலையில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும். முதலாளியம் தனது புதைகுழியைத் தானே தோண்டிக் கொள்ளும். அந்தப் புதைகுழியில் இருந்து புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட புதிய உற்பத்தி வடிவம் தோற்றம் பெறும். அந்த வடிவமாக சோசலிச சமுதாயம் பிறக்கும். அந்த சோசலிச சமுதாயத்தில் அனைத்து உற்பத்தி சாதனங்களும் பொதுடமையாக்கப்படும். அந்தப் புரட்சிகரமான புதிய சமுதாயத்தில் வர்க்கப் பிரிவுகள் அழிந்து சமத்துவம் நிலவும். அந்த சோசலிச சமுதாயம் மேலும் வளர்ந்து கம்யூனிச சமுதாயமாக உன்னதம் பெறும். ஆளுபவர் - ஆளப்படுபவர் என்ற முரணிய பேதங்கள் முற்றாக நீங்கும். கம்யூனிஸம் இறுதியில் உலகமயமாகி முழு மனித வர்க்கத்தையும் தழுவிக்கொள்ளும்' என்றெல்லாம் எதிர்வு கூறினார் - கனவு கண்டார் - கார்ள் மார்க்ஸ்.

முதலாளியத்தின் சாவு பற்றிய அவரின் கனவு - தீர்க்கதரிசனம் - பலிக்கவில்லை என்பதை தமது கட்டுரையொன்றில் சுட்டிக் காட்டுகின்றார் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

'மூலதனம்' என்ற தனது நூலாய்வில் தொழில் நுட்பத்தின் தன்மையை - அதன் பேராற்றலை - அவர் சரியாகப் புரிந்து கொள்ளாதமையே இந்தத் தீர்க்கதரிசனம் பிழைத்தமைக்கான பிரதான காரணம் என்று சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

முதலாளிய - தொழிலாளிய உறவுகள் முற்றி மேற்கு நாடுகளிலும் புரட்சி வெடிக்கும், சோசலிசம் உருவாக்கம் பெறும் என்ற மார்க்ஸின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

முதலாளியம் - தொழிலாளியம் என்ற இரண்டு தரப்புகளுக்கு நடுவில், தொழில்நுட்பவியம் என்ற மூன்றாம் தரப்பு உருவாகி, ஸ்திரம் பெற்று, பலமடைந்து, இந்த இரண்டையும் ஆட்டிப்படைக்கும் வலுவாக அது மாறும் என்பதை கார்ள் மார்க்ஸின் காலத்தில் எதிர்வு கூற முடியவில்லை

இன்றைய தொழில்நுட்ப உலக விருத்தியில் தகவல் தொழில்நுட்பம் பிரதானமானது. உலகம் முழுவதும் டிஜிட்டல் மயமாகி வருகிறது.

அந்தக் கட்டமைப்பின் பிரதான வகிவாகம் அந்த முதலாளிகளுக்கு உரியது அல்ல. அல்லது அதை பயன்படுத்தும் சாதாரண மக்களிடமும் அது இருப்பதில்லை. இரண்டுக்கும் நடுவில் அதை இயக்கும் தொழில்நுட்ப நிபுணர்கள் - எல்லாம் பணியாளர்கள்தான் - அதன் பிரதான வகிபாகத்தை நிரப்புகின்றார்கள். பல சமயங்களில் டிஜிட்டல் உலகின் முதலாளியத்தைத் தன் வழிப்படுத்தி, மேலாதிக்கம் செலுத்தி, தன் மேலாண்மையை நிறுவும் வலிமையில் தொழில்நுட்ப நிபுணத்துவம் உறுதி பெற்றிருக்கின்றது. முதலாளியம் - தொழிலாளியம் ஆகிய இரண்டின் மீதும் மேலாதிக்கம் செலுத்தக்கூடிய தொழில்நுட்பவியமே இன்று உலகின் இயங்கு திசையை தீர்மானிக்கின்றது. துவே நிஜம்.

# அரச நிறுவனங்களை சீரமைக்க நடவடிக்கை

அரச நிறுவனங்களை மறு சீரமைக்கும் நடைமுறைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டு கடன்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் தேவையான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா - மன்னார் இடையில் கடல் போக்குவரத்துச் சேவை!

## மன்னார் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

இந்தியாவுக்கும் தலை மன்னாருக்கும் இடையில் கடல் போக்குவரத்து சேவையை நடத்த ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரைவில் தலை மன்னாரில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் முசலி தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று (22) தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றும் போது–

இதன் மூலம் எதிர்காலத்தில் மன்னார் அபிவிருத்தி அடையும். சூரிய சக்தியை கொண்டு மன்னாரை மேம்படுத்த முடியும்.

புத்தளத்தில் இருந்து மன்னார்வரை யாழ். குடா நாட்டின் ஊடாக முல்லைத்தீவுவரை பசுமை பொருளாதாரம் மற்றும் பசுமை வலுசக்தி ஆற்றல் உள்ளது. அதன் மையமாகப் பூநகரி நகரை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

மன்னாரைச் சுற்றுலா மையமாக மாற்றுவதுடன் மீன்பிடித் தொழில் வளர்ச்சியடையும் போது மன்னாரும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையும்.

அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே அரசின் கொள்கை. மன்னார் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.–என்றார்.

# பயிர்களைப் பாதுகாக்க வாயுத் துப்பாக்கிகள்!

வன விலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

வன விலங்குகளால் பயிர்களுக்குச் சேதங்கள் அதிகரித்துள்ளன என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குரங்கு, மயில், மர அணில் போன்ற விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்களைத் தடுக்கும் வகையில் விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

அங்குனுகொலபெலஸ்ஸவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விவசாயிகளுக்கு 268 வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.




# தென்கிழக்குப் பல்கலையில் இடம்பெற்ற மூலதனச் சந்தை வினா விடைப் போட்டி

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை மூலதன சந்தையானது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிரந்தர அபிவிருத்தியின் முக்கிய உந்து சக்தியாக அமைவதுடன், இன்றைய இளைஞர் சமூகம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மூலதன சந்தை தொடர்பான அறிவு , மற்றும் போட்டி சந்தை ஆய்வு தொடர்பான பல தகவல்களை வழங்குகின்றது.

இலங்கை பங்குப்பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை இணைந்து மூலதனச் சந்தை திறந்த போட்டிச் சமரினை நாடுதழுவிய பல்கலைக்கழக ரீதியில் நடத்தி வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக பிரதான கேட்போர் கூடத்தில் பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா தலைமையில், முகாமைத்துவ பீட நிதியியல் பிரிவு விரிவுரையாளர் எம்.சிறாஜி ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பீடங்களுக்கிடையிலான 15 குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற "மூலதனச்சந்தை திறந்த வினா விடைப்போட்டிச் சமர் 2023" நிகழ்வில் ஐந்து பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொண்டனர்.

இதில் முதலாம் இடத்தை கலை மற்றும் கலாச்சார பீடத்தின் பொருளியல் துறை அணிகள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

இவர்கள் 75 ஆயிரம் ரூபா பணப் பரிசு மற்றும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். மூன்றாம் இடத்தைத் தொழில்நுட்ப பீடம் பெற்றுக் கொண்டது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக இலங்கை பங்குபரிவர்த்தனை ஆணைக்குழு சார்பாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை சந்தைப்படுத்தல் சிரேஷ்ட உப தலைவர் நிரோஷன் விஜேசுந்தர, கொழும்பு பங்கு பரிவர்த்தனை சிரேஷ்ட முகாமையாளர் சஜீவனி பக்மெடினிய, கொழும்பு பங்கு பரிவர்த்தனை வெளித்தொடர்பாடல் முகாமையாளர் நிமல் குமாரசிங்க, கொழும்பு பங்கு பரிவர்த்தனை மட்டக்களப்பு கிளை முகாமையாளர் ஆர்.எம். சிவநாதன் ஆகியோருடன் பல் கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர் கள், பதிவாளர், நிதியாளர், கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.







# காரைதீவு சுகாதார அலுவலகத்தில் மார்புப் புற்று நோய் விழிப்புணர்வு

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஒழுங்கு செய்திருந்த பெண்களுக்கான மார்பு புற்று நோய் மற்றும் வாய்ப்புற்று நோய் தொடர்பான சிகிச்சையும் விழிப்புணர்வு நிகழ்வும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி தஸ்லீமா பஸீர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் காரைதீவு, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர், தாதியர்கள் கலந்து கொண்டனர்.





# காவியமான ஆண்கள் தினம்...!

பெரியசாமி சுசாந்தனி
யாழ். பல்கலைக்கழகம்

**(இலை மறை காயாகக் கொண்டாடப்பட்ட ஆண்கள் தினம் இனியாவது வெளித் தெரியட்டும் நவம்பர் 19ஆம் திகதியன்று என்று.)**

ஆண்கள்உடலால்வலிமையானவர்கள் என்றும் ஆண்கள் சிங்கம் போன்ற வர்கள் என்றும் உவமைகளால் அலங்கரித்து அலங்கரித்து அவர்களின் உணர்வுகள் இலை மறை காயாகவே காணாமல் போகச் செய்கிறது. அதேபோல் தான் ஆண்கள் தினமும் இலை மறை காயாகவேதான் ஒவ்வொரு வருடமும் தெரியப்படாமல் கலந்து செல்கின்றது.

ஆண்களுக்கு நிகர் பெண்கள் பெண்களுக்கு நிகர் ஆண்கள் என்று கூவல்கள் இருந்தாலும் அவை அறை கூவல்களாகவே ஒழித்து மறைகின்றன. மகளிர் தினம் கொண்டாடப்படும் அளவுக்கு ஆண்கள் தினம் பேசப்படுவது கூட இல்லை.

சமூக வலைத் தளங்களாக இருக்கலாம் தொழில்துறை நிறுவனங்களாக இருக்கலாம் இவ்வளவு ஏன் ஒரு சாதாரண அடிப்படை அழகான குடும்பத்தில் கூட இருக்கலாம் ஒரு பெண் தான் கொண்டாடப்படுகிறாளே தவிர ஆண் கிடையாது.

பெண்களுக்கு நிகர் ஆண்கள் சாதனை புரிகின்றனர், தியாகம் செய்கின்றனர். ஆனால் மகளிர் தினம் பிரபல்யம் காணும் அளவுக்கு ஆண்கள் தினம் பிரபல்யம் ஆகிறதா என்றால் அது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.அவ்வாறாக நாம் கடந்துபோன ஆண்கள் தினம் பற்றிய சுவாரசியமான தகவல்களை தேடிப் பார்ப்போம்.

வரலாறு என்பது எந்தவொரு விடயத்துக்கும் இன்றியமையாத அம்சமாக காணப்படுகின்றது. அவ்வாறாக ஆண்கள் தினம் எவ்வாறானதொரு வரலாற்று பாதையை கொண்டுள்ளது என நோக்கும் போது,

சர்வதேச ஆண்கள் தினம் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆண்களின் நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கி கொண்டாடப்படும் நாளாக இந்நாள் காணப்படுகின்றது. அதே போல் சமூக மட்டத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமும் ஆண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் ஆண்களின் நலன் சார் முயற்சிகளில் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டும் செயல்படுகின்றது.

ஒரு நோக்கோடு நவம்பர் 19 ஆம் தேதி ஆண்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது. ஆனால் அது விழித்தறியப்படாமல் இருப்பதே கவலைக்குரிய விடயம்.

ஆண்கள் தினம் தோற்றம் எவ்வாறு என்று வரலாற்றுத் தொடரை அலசும் போது, சர்வதேச ஆண்கள் தினம் என்ற ஒரு விடயம் 1992 ஆம் ஆண்டு தோமஸ் ஒஸ்டரால் என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது. இருப்பினும் அது பேசு பொருளாகவில்லை. ஒரு ஆணின் முக்கியத்துவம், ஆண்கள் தினத்தின் முக்கியத்துவம் 1999 ஆம் ஆண்டளவில் அறியப்பட்டதென்றே கூறலாம்.

தனது தந்தையினுடைய பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் டிரானாட் மற்றும் டொபோகோல் ஆகிய இருவரால் கொண்டாடப்பட்டது . இதுவே பிற்காலத்தில் ஆண்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து பேச இந்த நாளை பயன்படுத்தும் படியும் இவர்கள் ஊக்குவித்தார்கள். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆண்கள் தினத்தின் வரலாறு மேற்கிந்திய தீவுகள் பல்கலைக்கழகத்தின் வரலாற்று விரிவுரையாளரான டாக்டர் ஜெயராம் டெலுக்ஸிங் என்பவரால் புதுப்பிக்கப்பட்டதாகவும் வரலாறுகள் காணப்படுகின்றன.

நவம்பர் 19 ஆம் திகதி கொண்டாடப்படும் ஆண்கள் தினம் சுவாரஸ்யமான வரலாற்று பார்வையை கொண்டு காணப்படுவதோடு ஆண்கள் தினத்தின் முக்கியத்துவம் பற்றியும் சிந்தனை செல்ல அதனை சிறிது அலச ஆரம்பித்தேன்.

காவியமாய் தெரியும் ஆண்களை கண்டு கொள்ளாத நிலையில் சமூகம் காணப்பட அவர்களின் பால் பார்வை செல்ல, அவர்களின் விலைமதிப்பற்ற உணர்வுகள் மதிக்கப்பட, அவர்களின் நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியம் மேம்பட, அவர்களுக்கான பாலியல் போராட்டங்கள் மற்றும் ஆண்களுக்கான உரிமைகள், பாதிக்கப்படும் சமூக நிலைப் பாடுகள் பற்றி குரல் கொடுப்பதற்கும் அடிப்படை மனிதாபிமானமான விழும் எங்கள் மற்றும் ஆண்கள் மீதான விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் டாக்டர் டெலுக்சிங் என்பவரால் சட்டபூர்வமாக ஆண்கள் தினம் அனுசரிக்கப்பட்டது.

ஆண் என்றால் அழக்கூடாது என்ற சமூக முட்கற்பிதங்களால் உணர்வுகளை உள்ளுக்குள் வைத்துத் தனக்குள் அமுது முடிக்கும் ஆண்களுக்கும் உணர்வுகள் உறைந்தே செல்கின்றன. ஒரு ஆணின் உணர்வுக்காய் பேனாமை வருடும் நான் ஒரு பெண்தான். அவ்வாறான முட்கற்பித வார்த்தைகளை எதிர்த்து நான் பார்த்த ஆணின் உணர்வுகள் என் போனா முனையை எழுத எத்தனித்தது.

அவனது அழுகைகள் காற்றோடு கரைகின்றன. அவனது தியாகங்கள் இரவோடு மறைகின்றன. ஏனோ அவனின் சிரிப்பை மட்டும் சமூகம் விட்டு வைத்து விட்டது. ஆவர்களுடைய உணர்வுகள் மறைக்கப்படுவதைப் போல அவர்களுக்கான தினமும் நாட்காட்டியின் சாதாரண நாளாகவே கிழக்கில் உதயமாகி மேற்கில் மறைந்த செல்கின்றது.

கடந்து செல்லும் தினத்தின் இன்னும் சில சுவாரசியங்களை மீட்டி பார்ப்போமானால்,

நம் எல்லோரது வாழ்விலும் தகப்பனாய், சகோதரனாய், காதலனாய் , கணவனாய் என்ற பாத்திரமேற்று வாழ்வின் முன்னேற்றத்துக்குத் தூணாய் விளங்கும் அவனின் தினம் ஆறு தூண்களை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகிறது. இது ஆறு முக்கியத்துவம் மிக்க விடயங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது முதலாவது தூண் இன்றைய வாழ்வின் தொழிலாளர் வர்க்க ஆண்களை போற்றுவதாகவும், இரண்டாவது தூண் ஒரு ஆணின் சமூகம் அமைப்பில் குடும்பம் திருமணம் குழந்தை பராமரிப்பு, சுற்றுச்சூழலில் ஆண்களின் பங்களிப்பு வெளிப்படுவதை மூன்றாவது தூணாகவும் ஆண்களின் ஆரோக்கியம் மற்றும் சமூக உணர்ச்சி உடல் மற்றும் ஆன்மீக நல்வாழ்வை கவனத்தில் கொள்வதற்காக நான்காவது தூணாகவும், ஐந்தாவது தூணாக பல துறைகளில் அவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகளை எடுத்துக்காட்டுவதாகவும், இறுதியாக பாலின சமத்துவம், பாலின உறவுகள் , பால் நிலை விழிப்புணர்வை

(9ஆம் பக்கம் பார்க்க)

# காவியமான ஆண்கள் தினம்...!

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்துவதே ஆறாவது தூணாகவும் கொண்டு ஆறு தூண்களின் வாயிலாக ஆண்களின் அவசியப்பாடுகள் அடக்கப்படுகின்றன.

அவற்றை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருவது ஆண்கள் தினத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.

இவ்வாறான முக்கியத்துவமான அம்சங்கள் புதைந்து காணப்படும் ஆண்கள் தினத்தை மேலைத்தயே நாடுகள் ஆரம்ப காலம் முதல் கொண்டாடி வருகின்றது.

அதேவேளை 2007ஆம் ஆண்டு 'ஆண்கள் உரிமைக் கழகம்' என்ற அமைப்பின் ஊடாக இந்தியாவில் கொண்டாடப்படுவதாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கையிலும் ஆண்கள் தினம் கொண்டாடப்படுவதற்கான அங்கீகாரம் கிடைத்தது.

ஆனால் அனைத்தும் இரு பரிமாணத்திலேயே இன்று வரையிலும் வெள்ளைப் பக்கங்களின் கருப்பெழுத்தாகவே காணப்பெறுகின்றது. முப்பரிமான நிலைப்பாட்டை காண இன்னும் காலங்கள் எடுக்கும் என்பதே சமூக நிலைப்பாடாகும். இது கவலைக்கு உரிய ஒரு வெளிப்பாடாகவே இருக்கின்றது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

கடந்து சென்ற காலங்களை மீட்க முடியாது. இனிவரும் காலங்களிலாவது ஆண் என்ற புத்தகத்தைப் படித்து உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஆண்கள் தினத்தை கொண்டாடுவோம். இவர்




கூறும்போது அடுத்த கேள்விக்கணையும் என்னுள்ளே உதிக்கிறது. உங்களுக்குள்ளும் வந்திருக்கலாம் என்று நினைக்கின்றேன். இந்த ஆண்கள் தினத்தை எப்படித் தான் கொண்டாடுவது சற்றே அதனையும் பார்த்து செல்வோம்.

ஆண்கள் தினம் அது நீங்கள் விரும்பிய வண்ணம் அவர்களை மகிழ்வுப்படுத்தலாம். ஆனாலும் அதனை வீண் செலவுக்கு வழிகாட்டிடாமல் ஆணின் உடல்நலம் தொடர்பான காரணங்களுக்காக நன்கொடை செய்யுங்கள் அல்லது ஆண்களின் மன ஆரோக்கியம் மற்றும் உடல் நிலை பற்றிப் பேசும் சுவரொட்டிகள் விழிப்புணர்வுகளை மேற்கொள்ள பழகுங்கள். வெறுமனே வலைதள பரப்புரைகளையும் வலைத்தள கொண்டாட்டங்களாகவும் இருந்து விட்டுச் செல்லாமல் உணர்வுகளை மறைத்து வாழும் உறவுகளுக்கு ஒரு நாள் ஏனும் நேரில் வாழ்த்துங்கள். 'இனிய ஆண்கள் தினம்' என்று வாழ்த்துங்கள்.

ஒரு பெண் தந்தையிடமிருந்தும் கணவனிடமிருந்தும் காதலனிடமிருந்தும், சகோதரனிடமிருந்தும் பெற விரும்பும் அன்பை ஒரு ஆண் தாயிடமிருந்தும் மனைவியிடமிருந்தும் காதலியிடமிருந்தும் சகோதரியிடமிருந்தும் பெற விரும்புவான் என்பதை எப்போதும் மறவாதீர்கள்.

இலை மறை காயாகக் கொண்டாடப்பட்ட ஆண்கள் தினம் இனியாவது வெளித் தெரியட்டும் நவம்பர் 19ஆம் திகதியன்று என்று.

ஆழமான உணர்ச்சிகளுக்கு ஆண் சொந்தமில்லை என்ற கற்பிதங்களை இந்த சமூகம் இனியாவது தகர்த்தெறியட்டும். ஆணும் அழகியதொரு கவிதை தான் படிக்கத் தெரிந்தவர்களுக்கு.

# கற்பிட்டி இளைஞர் சேவை மன்ற சம்மேளனத்துக்குப் புதிய தலைவர்

(ரஸீன் ரஸ்மின்)

இளைஞர் சேவை மன்றத்தின் கற்பிட்டி பிரதேச சம்மேளனத்தின் புதிய தலைவராக எஸ்.எமுஹம்மது சஜான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கற்பிட்டி பிரதேச செயலக சம்மேளனத்திற்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு கற்பிட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிர்வாகத் தெரிவில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 31 இளைஞர் கழக நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, கற்பிட்டி இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பதவிக்காக முசல்பிட்டி கிராம சேவகர் பிரிவின் இளைஞர் மன்ற தலைவர் முஹம்மட் ஹிஜாஸ், கற்பிட்டி மண்டல இளைஞர் கழகத்தின் தலைவர் எஸ். முஹம்மது சஜான் ஆகியோர் போட்டியிட்டனர்.

இதன்போது, முஹம்மது ஹிஜாஸ் 18 வாக்குகளும் , அவரை எதிர்த்து போட்டியிட்ட கற்பிட்டி மண்டல இளைஞர் கழகத்தின் தலைவர் எஸ். முஹம்மது சஜான் 70 வாக்குகளும் பெற்றனர்.



அதன் அடிப்படையில், எஸ்.முஹம்மது சஜான் 53 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளதுடன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கற்பிட்டி பிரதேச சம்மேளனத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

# உள்ளூராட்சி அமைச்சுக்கு புதிய பணிப்பாளர் நாயகம்!

(கே. எ. ஹமீட் )

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக (தொழினுட்பம்) பொறியியலாளர் யூ.எல். அஹமட் நசார் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது ஆரம்ப கல்வியை கல்முனை உவெஸ்லி உயர் தரப் பாடசாலையில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் விஞ்ஞானமானி பட்டத்தை



சிவில் துறையில் பெற்ற இவர் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் பட்டயப் பொறியியலாளர் ஆவார்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நீர்ப்பாசன பொறியியலாளராகவும், அம்பாறை மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளராகவும் கடமையாற்றியவர்.பொறியியல் துறையில் 26 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய இவர் நிர்மாண முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டவர்.



# முல்லை ஊடக அமையத்தின்ஆண்டு நிகழ்வும் போர்க்கால ஊடகவியலாளர்கள் மதிப்பளிப்பும்

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும், போர்காலத்தில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் மதிப்பளிப்பும் நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு ஊடகஅமையம் கடந்த 2021ஆம் ஆண்டு புதியக கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவுற்றுள்ளன. முல்லைத்தீவு ஊடக அமையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழாவும், போர்க்கால ஊடகவியலாளர் மதிப்பளிப்பு நிகழ்வும் முல்லைத்தீவு ஊடக அமையத்தலைவர் சண்முகம் தவசீலன் தவசீலன் தலை மையில் நேற்று இடம்பெற்றது.

விருந்தினர் மற்றும், போர்க்கால ஊடகவியலாளர் வரவேற்புடன் ஆரம்பமான இந் நிகழ்வில், தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், விருந்தினர்களது உரை என்பன இடம்பெற்றன.

இவற்றைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான உரிமைப்போர்க் காலப் பகுதியில் தமது உயிரைத் துச்சமென மதித்து ஊடகத்துறை மூலமாக மக்களது அவலங்களையும், உண்மை நிலைமைகளையும் உலகறியச்செய்ய அளப்பெரும் சேவையாற்றிய முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த போர்க்கால ஊடகவியலாளர்கள் 15பேர் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர்.
நினைவுச்சின்னங்களும், நினைவுப் பரிசிலும் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவ சுப்பிரமணியம் ரகுராம், ஊடகவிரிவுரையாளர் அமிர்தநாயகம் நிக்ஸன், சட்டத்தரணிகளான வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன், ருஜிக்கா நித்தியானந்தராசா ஆகியோரும் இதன்போது மதிப்பளிக்கப்பட்டு அவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப.கார்த்தீபன், போர்க்கால ஊடகவியலாளர்கள், முல்லைத்தீவு ஊடக அமைய ஊடகவிய லாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





















# உயர்தர மாணவருக்கு கல்முனையில் கௌரவம்

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை கல்வி வலயத்தில் 2022 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை எழுதி சகல பாடங்களிலும் அதி திறமைச் (3ஏ) சித்திகளைப் பெற்ற மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

"றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட்" சமூக அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் எம்.றிஸ்லி முஸ்தபா பங்கேற்புடன் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய கேட்போர் கூட்டத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சௌதுல் நஜீம், சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்ட நிகழ்வில் கல்முனை கல்வி வலயத்தில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்திபெற்ற மாணவர்கள் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



## வீட்டுத் திட்டத்துக்கு இறுதிக் கொடுப்பனவு

(எம். எப்.நவாஸ்)

கிராமத்துக்கு ஒரு வீடு எனும் வேலைத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் ஐந்து பேருக்கு வீட்டுக்கு உரிய இறுதிக் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் திருமதி ஜராங்கனியால் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம் ஏ சி. அகமது ஷாபீர் ஊடாக பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட வீடமைப்பு அதிகார சபை உதவி பொறியியலாளர் ஏ. சி. எம்.பாஹிம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஜே.அமீன், கே.பிரியந்தன், நிர்வாக உத்தியோகத்தர் கே வி. சலீம் மற்றும் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ எல்.ஜௌபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## முன்பள்ளி மாணவருக்கு இலைக்கஞ்சி வழங்கல்



(எம்.எப்.நவாஸ்)

போசனை மட்டத்தை உயர்த்தும் வகையில் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு அட்டாளச்சேனை ஆலங்குல முன்பள்ளியில் பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபீர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமைபீட முகாமையாளர் ஏ. எம். ஹமித், முகாமையாளர்களான ரீ. பரமானந்தம் , எஸ். எல் .அஸீஸ் மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ எஸ். உனைஸ், அட்டாளச்சேனை 17 ஆம் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். நஜிமுத்தீன் மற்றும் முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



# எமது நாட்டு மக்களிடையே ஒற்றுமையுடன் செயற்படுவோம்!

## அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம

(எம்.எஸ்.எம்.ஸாகிர் )

ஒன்பது மாகாணங்களிலும் இருக்கும் மக்களிடையே நாங்கள் எந்தவொரு இன, மத வேறுபாடும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம் - 2023 நிகழ்வு கடந்த சனிக்கிழமை (21) சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆஃபிகா, கணக்காளர் திருமதி என்.பி.எம். லரீப், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.ரம்ஸான், தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், அனுசரணையாளர் சிங்கர் ஷோரூம் உரிமையாளர் எஸ். எச்.ஜிப்ரி, முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம்.எம்.றியாத், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமூர்த்தி வங்கி முகாமையாளர் ஐ. எல்.எஸ். ஹிதாயா, முன்னாள் முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.எம். சமூன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ சபீர் அஹமட், முதியோர் மற்றும் சிறுவர்கள், மகளிர் விசேட தேவையுடையோர் விவகாரங்களுக்குப் பொறுப்பான உத்தியோத்தர்களான எஸ்.ஐ. பஸ்மியா, எம்.எப்.எப்.சியாமி, எம்.என். சியாத், யூ.கே. றிம்ஸான், சுரேஷ்குமார், ஏ.எச். சபீகா, ஏ.எம்.பர்ஹான், வை.திருப்பதி, என்.எம்.எஸ். ஷிரீன், எச்.எம்.பாத்திமா றுமைஸா, பர்சாத், சியானா, நஸ்லா. கௌரவ அதிதி றியாழுல் ஜன்னா பாடசாலை அதிபர் எம்.ஏ. அஸ்தர், பெண்கள் சிறுவர்கள் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.ஐ. இஷானா, பிறப்பு, இறப்பு பதிவாளர் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோத்தர் அஜ்மியா ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்துள்ளவை வருமாறு–

சிறுவர்களையும் அதேபோன்று சிரேஷ்ட பிரஜைகளையும் இணைத்து மிக முக்கியமாக செய்யப்படுகின்ற இந்த நிகழ்வு மிகச் சிறப்பானது.

அதேபோன்று ஒன்பது மாகாணங்களிலும் இருக்கின்ற மக்களிடையே நாங்கள் எந்த ஒரு இன வேறுபாடும் இல்லாமல் நாங்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

நாங்கள் வெளிநாடுகள் செல்லுகின்ற பொழுது வெளிநாடுகளிலே நாங்கள் ஒரு இலங்கையரைக் கண்டால் மிக மகிழ்ச்சியடைவோம். அந்த நேரத்தில் இன, மத, மொழி பார்ப்பதில்லை. நாங்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இலங்கையரைக் கண்டால் எப்படி மகிழ்ச்சி அடைவோமோ அப்படியான சூழல் எமது நாட்டுக்குள்ளே உருவாக வேண்டும்.

அதேபோன்று இஸ்லாம் மார்க்கத்தைப் பொறுத்த அளவில் இஸ்லாம் மார்க்கத்திலே ஸகாத் கொடுப்பது மிக முக்கியமானதொரு கடமை. அதிலே தனவந்தர்கள் ஏழைகளுக்காக வேண்டி அந்த ஸகாத் நிதியத்தைக் கொடுக்கின்ற பொழுது அவர்களை வறுமையில் இருந்து நீக்க முடியும்.

அதேபோன்று எதிர்காலத் தலைமுறைகளாக இருக்கின்ற எங்களுடைய சிறுவர்களும் சிரேஷ்ட பிரஜைகளும் நல்லதொரு வாழ்க்கையை நோக்கிச் செல்வதற்காக வேண்டி நாங்கள் அனைவரும் கைகோர்க்க வேண்டும் – என்றார்.

பிரதம அதிதி இதன்போது பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

சாய்ந்தமருதில் இருககும் பாலர் பாடசாலைச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் நிகழ்வை அலங்கரித்தன. சிறார்கள் உட்பட முதியோர்கள் பரிசுப் பொருள்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# பாரதீய ஜனதா கட்சியிலிருந்து நடிகை கௌதமி விலகினார்!



பாரதீய ஜனதாக்கட்சியில் இருந்து நடிகை கௌதமி விலகியுள்ளார்..

இது தொடர்பில் அவர் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிவிப்பில், தனிப்பட்ட நெருக்கடியின் போது கட்சித் தலைமையிடம் இருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தனது ஏமாற்றத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இதனால் கடுமையான இதயத்துடனும் ஏமாற்றத்துடனும் கட்சியில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பணம், சொத்து மற்றும் ஆவணங்களை ஒருவர் மோசடி செய்துள்ளார் என்றும், எனினும் கட்சியின் சிலர் அவருக்கு தீவிரமாக ஆதரவளிகின்றனர் எனவும் கௌதமி சுட்டிக்காட்டியுள்ளார்.

# உதயநிதியை அமைச்சராக்கியதுதான் தி.மு.க. அரசின் சாதனை-பழனிசாமி

இரண்டரை ஆண்டுகளில் உதயநிதியை அமைச்சராக்கியது தான் தி.மு.க. அரசின் சாதனை என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் சீலநாயக்கன்பட்டியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய பழனிசாமி, சிறுபான்மை மக்களுக்கு எதிராக அ.தி.மு.க. இருப்பது போன்ற மாய தோற்றத்தை கடந்த காலத்தில் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சியினர் உருவாக்கினர்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக பேணிக்காக்கப்பட்டது. பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது பல்வேறு மாநிலங்களில் வன்முறை நிகழ்ந்தது.

ஆனால், அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா சிறுபான்மை மக்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கி சிறிய பிரச்சினை கூட இல்லாமல் பார்த்துக் கொண்டார்.

கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் அவ்வப்போது அமைக்கப்படுகிறது.



கொள்கை என்பது நிலையானது. அ.தி.மு.க. நிலையான கொள்கையை கொண்டது. அ.தி.மு.கவுக்கு சாதி, மதம் வேறுபாடு கிடையாது. அவரவர் மதம் அவர்களுக்கு புனிதமானது. அதில் யாரும் தலையிட முடியாது.

தி.மு.க, அரசின் இரண்டரை ஆண்டு ஆட்சி காலத்தில் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. மேட்டூர் அணையை நம்பி உள்ள 24 மாவட்டங்களில் உள்ள மக்களை பாதுகாக்காமல், தன் பதவியை மட்டுமே தி,மு,க, அரசு பாதுகாக்கிறது.

தி.மு.க. ஆட்சியில் போதைப் பொருள் நிறைந்த மாநிலமாக தமி ழகம் காட்சியளிக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின்னர் புதிதாக ஒரு திட்டத்தையும் கொண்டுவரவில்லை. நீட் தேர்வுக்கு எதிராக அனைவரிடமும் கையெழுத்து வாங்கினால் நீட் தேர்வு ரத்தாகி விடுமா, மக்களவைத் தேர்தலில் மக்களை சந்திக்கும்போது நீட் தேர்வு ரத்து குறித்து மக்கள் கேள்வி எழுப்புவார்கள் என்பதற்காகவே கையெழுத்து இயக்கத்தை தொடங்கி ஏமாற்றுகிறார்கள். ஆனால், மக்கள் ஏமாற மாட்டார்கள். இரண்டரை ஆண்டுகளில் உதயநிதியை அமைச்சராக்கியது தான் தி.மு.க. அரசின் சாதனை என்று தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீனத்துக்கு இந்தியா உதவி: நிவாரண பொருள்கள் அனுப்பி வைப்பு

ஹமாஸ் அமைப்பு மற்றும் இஸ்ரேல் இராணுவத்துக்கு இடையிலான மோதல் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனத்துக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருள்களை இந்திய அரசு அனுப்பி உள்ளது.

6.5 தொன் உயிர்காக்கும் மருந்துப் பொருள்கள், 32 தொன் அத்தியாவசிய பொருள்கள் என 38 தொன் நிவாரணப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள் ளன.

காசா மக்களுக்கு வழங்குவதற்காக இந்திய விமானப் படை விமானம் மூலம் இந்த நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



# தீவிரமடையும் இஸ்ரேல் - ஹமாஸ் போர்: 24 மணி நேரத்தில் 117 குழந்தைகள் பலி!



காசாவின் குடியிருப்பு பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசா ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜபாலியா அகதிகள் முகாம் அருகில் உள்ள அல் சுஹாபா பகுதியில் இருந்த கட்டடத்தின் மீதான இந்தத் தாக்குதலின்போது அருகிலுள்ள கட்டடங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த 24 மணிநேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 117 குழந்தைகள் உட்பட 266 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

மிகவும் தீவிரமடைந்துள்ள இஸ்ரேல் – ஹமாஸ் போர் 17 ஆவது நாளை எட்டியுள்ளது.அடுத்தக் கட்டமாக வடக்கு காசாவில் தரைவழி தாக்குதல் நடத்த இஸ்ரேல் இராணுவம் தயாராகி வருகிறது.

எல்லையில் தனது துருப்புகளை இஸ்ரேல் குவித்து வருகிறது. முன்னதாக இஸ்ரேல் காசா மீது கடந்த ஞாயிற்றுக் கிழமையும் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில் இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் மீது பீரங்கி குண்டுகள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்த திட்டமிட்டருந்தது.

இந்த நிலையில், லெபனானில் உள்ள இரண்டு ஹிஸ்புல்லா நிலைகளின் மீது இன்று அதிகாலையில் தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்த விபரங்களைத் தெரிவிக்காமல் தங்களின் வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று மாத்திரம் ஹிஸ்புல்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு கூறுகையில்,

இந்தப் போரில் ஹிஸ்புல்லாக்கள் இணைவார்களேயானால் அது இரண்டாவது லெபனான் போருக்கு வழி வகுக்கும். அவர்கள் தங்கள் வாழ்நாளில் மிகப்பெரிய தவறினை செய்கிறார்கள் என்று எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜோனாதன் கான்ரிகஸ் கருத்து தெரிவிக்கையில்,

ஹிஸ்புல்லாக்கள் மிகவும் அபாயகரமான விளையாட்டை விளையாடுகிறார்கள். அவர்கள் நிலை மையினை மேலும் தீவிரமாக்குகிறார்கள். நாங்கள் நாளுக்கு நாள் அதிகமான தாக்குதல்களைச் சந்திக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானின் உயர் தூதரக அதிகாரி சுஹசைன் அமிர் அப்துல்லாஹியன் கருத்து தெரிவிக்கையில், இஸ்ரேலும், அமெரிக்காவும் காசா மீதான இனப்படுகொலைத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் அந்தப் பிராந்தியம் கட்டுப்பாட்டை மீறியதாக மாறிவிடும் என்று எச்சரித்துள்ளார்.

இதனிடையே நடைபெற்றுவரும் போர் சூழல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி தனது மேற்கத்திய நட்பு நாடுகளான பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அப்போது இஸ்ரேலுக்கான தங்களின் ஆதரவையும், தீவிரவாதத்துக்கு எதிராக தன்னைத் தற்காத்துக்கொள்ளும் இஸ்ரேலுக்கான உரிமையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

# ஈராக் செல்ல வேண்டாம்: அமெரிக்க மக்களுக்கு எச்சரிக்கை



மறு அறிவிப்பு வரும் வரை ஈராக் செல்ல வேண்டாம் என அமெரிக்கா அந்த நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் மற்றும் பணியாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பின் அமெரிக்க குடிமக்கள் ஈராக்கிற்கு செல்ல வேண்டாம் என அமெரிக்க வெளிவிவகாரத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

பயங்கரவாதம், கடத்தல், ஆயுத மோதல் மற்றும் உள்நாட்டு அமைதியின்மை போன்ற காரணங்களால் ஈராக்கிற்கு செல்ல வேண்டாம் என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்கர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளதை தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பாக்தாத் சர்வதேச விமான நிலையத்தை பயன்படுத்த வேண்டாம் என்று அமெரிக்க வெளிவிவகாரத் துறை தனது குடிமக்களுக்கு தெரிவித்துள்ளது.